இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 152 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 27 – ஞாயிற்றுக்கிழமை 11 ஜனவரி 2026 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 152 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 27 - Sunday 11 January 2026 - Madurai 16 Pages ₹ 5.00

## நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்! 2ஆம் அமர்வு தேதியை மாற்றவேண்டும்! எதிர்க்கட்சிகள் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜன. 11 -

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் இரண்டாம் பகுதி 5 மாநில தேர்தல் பிரச்சாரத்தை பாதிக்கும் என்பதால், நாடாளுமன்றம் கூடும் தேதியை மாற்ற வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.



நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் வரும் 28 ஆம் தேதி முதல் ஏப்ரல் 2 ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 14 முதல் மார்ச் 8 வரை விடுமுறை என்று கூறப்பட்டுள்ளது. தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, மேற்குவங்கம் மற்றும் அசாம் ஆகிய 5 மாநில சட்டப்பேரவை தேர்தல் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடைபெற உள்ளது.

ஆனால், இரண்டாம் கட்ட பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெறும் மார்ச் மாதத்தில்தான் வேட்பு மனுத் தாக்கல், தேர்தல் பிரச்சாரம் உள்ளிட்ட தேர்தல் நடவடிக்கைகள் உச்சத்தில் இருக்கும் காலம் ஆகும். எனவே, நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 2ஆம் அமர்வு தேதியை, தேர்தல் அட்டவணைக்கு ஏற்ப மாற்ற வேண்டும் என்று வலியுறுத்த எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

## பூவிருந்தவல்லி - போரூர் மெட்ரோ ரயில்! பாதுகாப்புச் சான்றிதழ் ஒப்புதல்!

சென்னை, ஜன. 11–

சென்னையில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் பூந்தமல்லி முதல் கலங்கரை விளக்கம் வரையிலான 4வது வழித்தடத்தில் பூந்தமல்லி – போரூர் சந்திப்பு வரை 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு மெட்ரோ ரயில் சேவை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பயன்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பாதுகாப்பு சான்றிதழ் கிடைக்காததால் மெட்ரோ ரயிலை இயக்குவதில் சிரமம் ஏற்பட்டது.



இந்திய ரயில்வே ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தர நிர்ணய அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகள் முன்னிலையில் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நடந்தது. 90 கிலோ மீட்டர் வேகத்தில் மெட்ரோ ரயில்களை இயக்கி, பயணிகளின் வசதி குறித்து மதிப்பீடு செய்யப்பட்டது. பிரேக்கிங் தொழில்நுட்பம், தண்டவாளத்தின் தரம், ரயில் பெட்டிகளின் வசதி, பயணிகளின் பாதுகாப்பு, கட்டுமானம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு மெட்ரோ ரயில் பாதை சிக்னல் தொழில்நுட்பத்திற்கு ரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்தது.

சிக்னல் தொழில்நுட்பத்திற்கு ரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்த நிலையில், தற்போது பூந்தமல்லி – போரூர் இடையே மெட்ரோ ரயிலை இயக்குவதற்கான தற்காலிக பாதுகாப்பு சான்றிதழை ரயில்வே வாரியம் வழங்கி உள்ளதாக மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### வரும் 2026 – சட்டப் பேரவைத் தேர்தலில்

# 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறுவோம்!

## கொளத்தூர் – சமத்துவப் பொங்கல் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி !

**சென்னை, ஜன. 11 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.1.2026) சென்னை, பெரம்பூர், டான்பாஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்துகொண்டு, அனைவருக்கும் வாழ்த்துக் கூறி உரையாற்றுகையில், "வரும் 2026 - சட்டப் பேரவைத் தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறுவோம்" என்று குறிப்பிட்டார்.**

முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை எழுச்சியோடு கொண்டாடும் இந்தச் சிறப்பான நேரத்தில் உங்களை எல்லாம் நான் சந்தித்து, இந்த கொளத்தூர் தொகுதியில் - மன்னிக்கவும் - நம்முடைய கொளத்தூர் தொகுதியில் இருக்கக் கூடிய கழகத்தின் செயல்வீரர்களுக்கு பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவிக்கும் ஒரு நல்ல வாய்ப்பு எனக்கு முன்கூட்டியே கிடைத்திருக்கிறது.

இந்த சிறப்பான நிகழ்ச்சியை - அது எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் - கிழக்கு மாவட்டத்தின் செயலாளராக நம்முடைய சேகர்பாபு அவர்கள் இருந்தாலும், நம்முடைய தொகுதி என்று சொன்னால் அதில் ஒரு எழுச்சி இருக்கும், ஒரு சிறப்பு இருக்கும், ஒரு மகிழ்ச்சி இருக்கும், ஒரு ஆர்வம் இருக்கும், ஆரவாரம் இருக்கும். நம்மையே அறியாமல் நம்முடைய உள்ளத்தில் ஒரு புளகாங்கிதம் இருக்கும். அந்த உணர்வோடு இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கும் நம்முடைய சேகர்பாபு அவர்களுக்கும் அவருக்குத் துணை நின்ற கழக நிருவாகிகளுக்கும் நான் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### கொளத்தூர் தொகுதி நிகழ்ச்சி எனக்கு ஒரு எனர்ஜி!

நான் பல நேரங்களில் கொளத்தூர் நிகழ்ச்சிக்கு வருகின்றபோது சொல்வதுண்டு, என்னதான் முதலமைச்சராக இருந்து பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு, பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி, கழக நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி, பொது நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி. அந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் நேரத்தில் என்ன மகிழ்ச்சி அடைகின்றேனோ, என்ன பெருமை அடைகின்றேனோ - ஆனால், அதைவிட கொளத்தூர் தொகுதியில் ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது என்றால், அதில் ஒரு வேகமும், ஒரு எனர்ஜியும் எனக்கு வந்துவிடுகிறது. அந்த எனர்ஜியுடன் தான் நான் உங்கள் முன்னால் நின்றுகொண்டிருக்கிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.1.2026) பெரம்பூர், டான்பாஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில், கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசுகளை வழங்கி விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ரங்கநாதன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ரவிச்சந்திரன், மண்டல குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், பகுதிச் செயலாளர்கள் ஐ.சி.எப். முரளிதரன், நாகராஜன், மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்கருதி உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**இந்த சிறப்பான நிகழ்ச்சியை - அது எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் - கிழக்கு மாவட்டத்தின் செயலாளராக நம்முடைய சேகர்பாபு அவர்கள் இருந்தாலும், நம்முடைய தொகுதி என்று சொன்னால் அதில் ஒரு எழுச்சி இருக்கும், ஒரு சிறப்பு இருக்கும், ஒரு மகிழ்ச்சி இருக்கும், ஒரு ஆர்வம் இருக்கும், ஆரவாரம் இருக்கும். நம்மையே அறியாமல் நம்முடைய உள்ளத்தில் ஒரு புளகாங்கிதம் இருக்கும். அந்த உணர்வோடு இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கும் நம்முடைய சேகர்பாபு அவர்களுக்கும் அவருக்குத் துணை நின்ற கழக நிருவாகிகளுக்கும் நான் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.**



### தேர்தல் களத்தில் 50 சதவிகிதப் பணியை முடித்துவிட்ட கழகத்தினர்!

பொங்கல் விழாவை இன்றைக்கு நாம் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று நான்கரை ஆண்டு காலத்தில் என்னென்ன திட்டங்களையெல்லாம் செய்திருக்கிறது, என்னென்ன சாதனைகளையெல்லாம் புரிந்திருக்கிறது என்பது உங்களுக்கு நான் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், நீங்கள் மக்களிடத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும்.

அதற்காகத்தான் இந்தப் பொங்கல் விழாவை இப்படி எழுச்சியோடு கூட்டி உங்களை ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்துவதற்காக, இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நீங்கள் தேர்தல் களத்தில் ஆற்றவேண்டிய பணிகளில் 50 சதவிகிதம் முடித்துவிட்டீர்கள். இன்னும் 50 சதவிகிதம் தான் மீதம் இருக்கிறது.

**இன்றைக்கு பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள். ஏன், பா.ஜ.க.வில் இருக்கக்கூடியவர்கள்கூட என்ன சொல்கிறார்கள் என்றால், தி.மு.க.-காரர்கள் போன்று**

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### மக்களிடம் ஏகோபித்த வரவேற்பு! 'திராவிட மாடல்' ஆட்சியின் சாதனை! 2 நாளில்

# பொங்கல் பரிசுத் தொகை ரூ.3348 கோடி விநியோகம்!

## 1 கோடியே 11 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கல்!

**சென்னை, ஜன. 11 -**

**அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம்வாழ் இலங்கை தமிழர்கள் குடும்பங்களுக்கு 10.1.2026 அன்று காலை 10 மணி வரை 24,924 நியாய விலைக் கடைகளில் உள்ள 1,11,61,979 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகை ரூ.3348.59 கோடி விநியோகம் செய்யப்பட்டுள்ளது.**

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் 2026 திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசு 2,22,91,710 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கப்படும் எனவும், பொங்கல் திருநாளை மேலும் சிறப்பாக கொண்டாட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ரொக்கப் பரிசாக ரூ.3,000/ வழங்கப்படும்" எனவும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.1.2026 சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார்.

மேலும், துணை முதலமைச்சர் அவர்கள் சென்னை, சிந்தாதரிப்பேட்டை TUCS நியாய விலைக் கடையிலும், அந்தந்த மாவட்டத்தில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் ஆகியோர்களுக்கு 2026 பொங்கல் பரிசுத் தொகுப்பிற்கான டோக்கன்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு 04.01.2026 முதல் 07.01.2026 வரை தொடர்புடைய நியாய விலைக் கடைப் பணியாளர்களால் வழங்கப்பட்டது.

இதில், முதல் நாள் 200 குடும்ப அட்டைத்தாரர்களும், இரண்டாம் நாள் 300 முதல் 400 வரையிலான குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசுத் தொகுப்பு பெறுவதற்கு ஏதுவாக தொடர்புடைய நியாயவிலைக் கடைப் பணியாளர்களால் டோக்கன்கள் விநியோகம் செய்யப்பட்டது. 10.1.2026 அன்று காலை 10 மணி வரை 24,924 நியாயவிலைக் கடைகளில் உள்ள 1,11,61,979 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகை ரூ. 3348.59 கோடி விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கூட்டுறவுத்துறை செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.